# குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி.S.செல்வி,<br>மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்,<br>மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,<br>வட்டாட்சியர் அலுவலக வளாகம்,<br>திருவண்ணாமலை – 606601. | மாவட்ட தகவியல் அலுவலர் அவர்கள்,<br>தேசிய தகவியல் மையம் (NIC),<br>திருவண்ணாமலை. |

கடித எண்.3886/DCPU/2025 நாள்: 06.02.2026

பொருள்: குழந்தைகள் நலன் – திருவண்ணாமலை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்திற்கு – ஆற்றுப்படுத்துநர் (Counselor) ஒரு பணியிடத்தை நிரப்ப பத்திரிக்கைச் செய்தி இணையத்தில் பதிவேற்றம் செய்யக் கோருதல் – சார்பு.

பார்வை: திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவரின் ஒப்புதல் நாள்; 08.01.2026.

******

பார்வையில் காணும்படி, திருவண்ணாமலை மாவட்டம், வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தில் பணிபுரிந்து வந்த ஆற்றுப்படுத்துநர் (Counselor) தன் சொந்த விருப்பத்தின்படி பணியினை இராஜினாமா செய்து கடிதம் கொடுத்துள்ளார். எனவே ஆற்றுப்படுத்துநர் ஒரு பணியிடம் காலியாக உள்ளது. காலிப்பணியிடத்தை ஒப்பந்த அடிப்படையில் நிரப்ப விண்ணப்பங்கள் பெற ஏதுவாக பத்திரிக்கை செய்தி வெளியிட ஆட்சியரிடம் 08.01.2026 அன்று ஒப்புதல் பெறப்பட்டு கடந்த 30.01.2026 அன்று நாளிதழ்களில் விளம்பர செய்தியாக வரப்பெற்றது. எனவே, தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் **மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், தாலுக்கா அலுவலக வளாகம், திருவண்ணாமலை, 606 601**, போன் 04175 223030 என்ற முகவரியில் அல்லது இணையத்திலும் விண்ணப்பங்கள் பெற்று பூர்த்தி செய்து 16.02.2026 அன்று மாலை 5.45 மணிக்குள் இவ்வலுவலகத்தில் கிடைக்கும்படி சமர்பிக்க வேண்டும். இது குறித்து சந்தேகங்களுக்கு 04175 223030 என்ற தொலைபேசி எண்ணிற்கு (கைபேசி எண்.6382614197,8531069777) தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். எனவே தகுதியான விண்ணப்பங்கள் வரப்பெற இணையதளத்தில் செய்தி வெளியிடுமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு:
1.பத்திரிக்கைச் செய்தி விவரம்.
2.விண்ணப்ப படிவம்.

S. [signature] 06/02/2026

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்,
திருவண்ணாமலை .

[initials] 6/2/26